| | | | சாக்ரமெண்டோ தமிழ் மன்றம்<br>திருக்குறள் போட்டி 2021<br>குழு 3 (வயது: 13-19) | |
|---|---|---|---|---|
| எண் | குறள் எண் | அதிகாரம் | குறள் | குறள் விளக்கம் |
| 1 | 1 | கடவுள் வாழ்த்து | அகர முதல எழுத்தெல்லாம் ஆதி<br>பகவன் முதற்றே உலகு | எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாக கொண்டிருக்கிறது. |
| 2 | 12 | வான்சிறப்பு | துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்<br>துப்பாய தூஉ மழை | நல்ல உணவுகளைச் சமைக்கவும், சமைக்கப்பட்ட உணவுகளை உண்பவர்க்கு இன்னுமோர் உணவாகவும் பயன்படுவது மழையே |
| 3 | 22 | நீத்தார் பெருமை | துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து<br>இறந்தாரை எண்ணிக்கொண் டற்று | பற்றுக்களைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரை பிறந்து இறந்தவர்களை கணக்கிடுவதைப்போன்றது. |
| 4 | 39 | அறன் வலியுறுத்தல் | அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்<br>புறத்த புகழும் இல | அறத்துடன் வருவதே இன்பம்; பிற வழிகளில் வருவன துன்பமே; புகழும் ஆகா |
| 5 | 47 | இல்வாழ்க்கை | இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்<br>முயல்வாருள் எல்லாம் தலை | அறத்தின் இயல்பொடு இல்வாழ்கை வாழ்கிறவன்-வாழ முயல்கிறவன் பல திறத்தாரிலும் மேம்பட்டு விளங்குகிறவன் ஆவான். |
| 6 | 55 | வாழ்க்கைத் துணைநலம் | தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்<br>பெய்யெனப் பெய்யும் மழை | பிற தெய்வங்களைத் தொழாமல் கணவனையே தெய்வமாகத் தொழுது வாழும் மனைவி, பெய் என்று சொன்னால் மழை பெய்யும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 62 | மக்கட்பேறு | எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்<br>பண்புடை மக்கட் பெறின் | பழி இல்லாத நல்ல பண்பு உடைய மக்களைப்பெற்றால் ஒருவனுக்கு ஏழு பிறவியிலும் தீவினைப் பயனாகிய துன்பங்கள் சென்று சேரா. |
| 8 | 76 | அன்புடைமை | அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்<br>மறத்திற்கும் அஃதே துணை | அறியாதவர், அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர்:ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்க்கும் அதுவே துணையாக நிற்கின்றது |
| 9 | 80 | அன்புடைமை | அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு<br>என்புதோல் போர்த்த உடம்பு | அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும்: அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல்போர்த்த வெற்றுடம்பே ஆகும் |
| 10 | 89 | விருந்தோம்பல் | உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா<br>மடமை மடவார்கண் உண்டு | செல்வநிலையில் உள்ள வறுமை என்பது விருந்தோம்புதலைப் போற்றாத அறியாமையாகும்: அஃது அறிவிலிகளிடம் உள்ளதாகும். |
| 11 | 82 | விருந்தோம்பல் | விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா<br>மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று | விருந்தினர் வீட்டிற்கு வெளியே இருக்கத் தான் மட்டும் தனித்து உண்பது, சாவைத் தடுக்கும் மருந்தே என்றாலும், விரும்பத் தக்கது அன்று |
| 12 | 93 | இனியவை கூறல் | முகத்தான் அமர்ந்தின்து நோக்கி அகத்தானாம்<br>இன்சொ லினதே அறம் | முகத்தால் விரும்பி- இனிமையுடன் நோக்கி- உள்ளம் கலந்து இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும். |
| 13 | 104 | செய்ந்நன்றியறிதல் | தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்<br>கொள்வர் பயன்தெரி வார் | ஒருவன் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை ஆராய்கின்றவர், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர். |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | 117 | நடுவு நிலைமை | கெடுவாக வையா துலகம் நடுவாக<br>நன்றிக்கண் தங்கியான் தாழ்வு | நடுவுநிலைமை நின்று அறநெறியில் நிலைத்து வாழகின்றவன் அடைந்த வறுமை நிலையைக் கேடு என கொள்ளாது உலகு. |
| 15 | 127 | அடக்கம் உடைமை | யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்<br>சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு | எதைக் காக்க முடியாதவரானாலும் நா ஒன்றையாவது காத்துக் கொள்ள வேண்டும். முடியாது போனால் சொல்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர். |
| 16 | 140 | ஒழுக்கம் உடைமை | உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்<br>கல்லா ரறிவிலா தார் | உலகத்து உயர்ந்தவரோடு பொருந்த ஒழுகும் முறையைக் கற்காதவர், பல நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவரே ஆவர். |
| 17 | 152 | பொறையுடைமை | பொறுத்த லிறப்பினை யென்றும் அதனை<br>மறத்த லதனினும் நன்று | வரம்பு கடந்து பிறர் செய்யும் தீங்கை எப்போதும் பொறுக்க வேண்டும்; அத் தீங்கை நினைவிலும் கொள்ளாமல் மறந்து விடுதல் பொறுத்தலை விட நல்லது |
| 18 | 173 | வெஃகாமை | சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே<br>மற்றின்பம் வேண்டு பவர் | அறநெறியால் பெறும் இன்பத்தை விரும்புகின்றவர், நிலையில்லாத சிறிய இன்பத்தை விரும்பி அறம் அல்லாதவற்றைச் செய்யார். |
| 19 | 184 | புறங்கூறாமை | கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க<br>முன்னின்று பின்னோக்காச் சொல் | எதிரே நின்று கண்ணோட்டம் இல்லாமல் கடுமையாகச் சொன்னாலும் சொல்லலாம்; நேரில் இல்லாதபோது பின் விளைவை ஆராயாத சொல்லைச் சொல்லக்கூடாது. |
| 20 | 198 | பயனில சொல்லாமை | அரும்பய னாயும் அறிவினார் சொல்லார்<br>பெரும்பய னில்லாத சொல் | அருமையான பயன்களை ஆராயவல்ல அறிவை உடைய அறிஞர், மிக்க பயன் இல்லாத சொற்களை ஒருபோதும் சொல்லமாட்டார் |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | 218 | ஒப்புரவறிதல் | இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்<br>கடனறி காட்சி யவர் | செய்யவேண்டிய கடமையை அறிந்த அறிவாளிகள், தம்மிடம் கொடுக்க இடம் இல்லாக் காலத்திலும், உழைக்கும் சக்தி அற்றவர்க்கு உதவத் தயங்க மாட்டார்கள் |
| 22 | 225 | ஈ.கை | ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை<br>மாற்றுவா ராற்றலிற் பின் | தவ வலிமை உடையவரின் வலிமை பசியை பொறுத்துக் கொள்ளலாகும், அதுவும் அப் பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்குப் பிற்பட்டதாகும். |
| 23 | 232 | புகழ் | உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்<br>றீவார்மேல் நிற்கும் புகழ் | சொல்வார் சொல்வன எல்லாம், இல்லை என்று வருபவர்க்குத் தருபவர்மேல் சொல்லப்படும் புகழே. |
| 24 | 247 | அருளுடைமை | அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்<br>கிவ்வுலகம் இல்லாகி யாங்கு | பொருள் இல்லாதவர்க்கு இப்பூவுலக இன்பம் இல்லாதது போலவே, அருள் இல்லாதவர்க்கு மேல் உலக இன்பம் இல்லை. |
| 25 | 261 | தவம் | உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை<br>அற்றே தவத்திற் குரு | தனக்கு உற்ற துன்பத்தை பொறுத்தலும் மற்ற உயிர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகிய அவ்வளவே தவத்திற்கு வடிவமாகும் |
| 26 | 288 | கள்ளாமை | அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்<br>களவறிந்தார் நெஞ்சில் கரவு | அளவறிந்து வாழ்கின்றவரின் நெஞ்சில் நிற்கும் அறம் போல் களவு செய்து பழகி அறிந்தவரின் நெஞ்சில் வஞ்சம் நிற்கும். |
| 27 | 297 | வாய்மை | பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற<br>செய்யாமை செய்யாமை நன்று | பொய் சொல்லாமல் ஒருவன் வாழ்ந்தால் பிற அறங்களைச் செய்யாமல் இருப்பதுகூட, அவனுக்கு நல்லதாகிவிடும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 28 | 304 | வெகுளாமை | நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்தின்<br>பகையும் உளவோ பிற | முகமலர்ச்சியும் அகமலர்ச்சியும் கொல்லுகின்ற சினத்தை விட ஒருவனுக்கு பகையானவை வேறு உள்ளனவோ? |
| 29 | 320 | இன்னா செய்யாமை | நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்<br>நோயின்மை வேண்டு பவர் | செய்யும் தீமை எல்லாம் செய்தவர்க்கே, அதனால் நமக்குத் தீமை வேண்டா என்பவர், அடுத்தவர்க்குத் தீமை செய்யமாட்டார். |
| 30 | 327 | கொல்லாமை | தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி<br>தின்னுயிர் நீக்கும் வினை | தன் உயிரையே இழக்க நேர்ந்தாலும், பிற இன்னுயிரை அதன் உடம்பிலிருந்து போக்கும் செயலைச் செய்யவேண்டா. |
| 31 | 331 | நிலையாமை | நில்லாத வற்றை நிலையின என்றுணரும்<br>புல்லறி வாண்மை கடை | நிலை இல்லாத பொருள்களை நிலையானவை என்று எண்ணும் அற்ப அழிவு இழிவானது. |
| 32 | 341 | துறவு | யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்<br>அதனின் அதனின் அலன் | எந்த எந்தப் பொருள்களின் மேல் விருப்பம் இல்லாதவனாய் விலகுகிறானோ அவன் அந்த அந்த பொருள்களால் துன்பப்படமாட்டான். |
| 33 | 360 | மெய்யுணர்தல் | காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்<br>நாமங் கெடக்கெடு நோய் | விருப்பு, வெறுப்பு, அறியாமை ஆகிய இக் குற்றங்கள் மூன்றனுடைய பெயரும் கெடுமாறு ஒழுகினால் துன்பங்கள் வராமற் கெடும். |
| 34 | 366 | அவா அறுத்தல் | அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை<br>வஞ்சிப்ப தோரும் அவா | ஒருவனை வஞ்சித்துக் கெடுப்பது ஆசையே. அதனால் ஆசை உண்டாகி விடாமல் அஞ்சி வாழ்வதே அறம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 35 | 383 | இறைமாட்சி | தூங்காமை கல்வி துணிவுடைமை அம்மூன்றும்<br>நீங்கா நிலனாள் பவற்கு | காலம் தாழ்த்தாத தன்மை, கல்வியுடைமை, துணிவுடைமை இந்த மூன்று பண்புகளும் நிலத்தை ஆளும் அரசனுக்கு நீங்காமல் இருக்க வேண்டியவை. |
| 36 | 396 | கல்வி | தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்<br>கற்றனைத் தூறும் அறிவு | மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்க்கு நீர் ஊறும், அதுபோல் மக்களின் கற்றக் கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும். |
| 37 | 405 | கல்லாமை | கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து<br>சொல்லாடச் சோர்வு படும் | படித்தவர் முன் பேசினால் படிக்காதவரின் பெருமை குறைந்து போகும். |
| 38 | 410 | கல்லாமை | விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்<br>கற்றாரோ டேனை யவர் | விலங்கை நோக்க மக்கள் எவ்வளவு வேறுபட்டவரோ, சிறந்த நூலைக் கற்றவரை நோக்கக் கல்லாதவர் அவ்வளவு வேறுபட்டவர். |
| 39 | 411 | கேள்வி | செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வஞ்<br>செல்வத்து ளெல்லாந் தலை | செவியால் கேட்டுப் பெறும் செல்வமே சிறந்த செல்வம்; இது பிற செல்வங்கள் எல்லாவற்றிலும் முதன்மையானது. |
| 40 | 418 | கேள்வி | கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்<br>தோட்கப் படாத செவி | கேள்வி ஞானத்தால் துளைக்கப்படாத செவிகள் ஓசைகளைக் கேட்டாலும் அவை செவிட்டுத் தன்மையவே. |
| 41 | 431 | குற்றங்கடிதல் | செருக்குஞ் சினமுஞ் சிறுமையும் இல்லார்<br>பெருக்கம் பெருமித நீர்த்து | செருக்கும் சினமும் காமமும் ஆகிய இந்தக் குற்றங்கள் இல்லாதவனுடைய வாழ்வில் காணும் பெருக்கம் மேம்பாடு உடையதாகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 42 | 444 | பெரியாரைத் துணைக்கோடல் | தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்<br>வன்மையு ளெல்லாந் தலை | தம்மைவிட (அறிவு முதலியவற்றால் ) பெரியவர் தமக்குச் சுற்றத்தராகுமாறு நடத்தல், வல்லமை எல்லாவற்றிலும் சிறந்ததாகும். |
| 43 | 468 | தெரிந்து செயல்வகை | ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று<br>போற்றினும் பொத்துப் படும் | ஒரு செயலை முடிக்கும் வழி அறியாது தொடங்கினால், பலர் சேர்ந்து துணை செய்தாலும், அச்செயல் கெட்டுப் போகும். |
| 44 | 477 | வலியறிதல் | ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்<br>போற்றி வழங்கு நெறி | தக்க வழியில் பிறர்க்கு கொடுக்கும் அளவு அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை (பல வளமும்) இருப்பது போல் தோன்றி இல்லாமல் மறைந்து விடும். |
| 45 | 482 | காலமறிதல் | பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்<br>தீராமை ஆர்க்குங் கயிறு | காலந் தவறாமல் காரியம் ஆற்றுவது, ஓடும் செல்வத்தை ஓடாமல் கட்டும் கயிறு ஆகும். |
| 46 | 509 | இடனறிதல் | தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்<br>தேறுக தேறும் பொருள் | எவரையும் ஆராயாமல் பதவியில் அமர்த்த வேண்டா; ஆராய்ந்த பிறகு தேர்ந்தவற்றின்மேல் சந்தேகம் கொள்ளவும் வேண்டா. |
| 47 | 511 | தெரிந்து வினையாடல் | நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த<br>தன்மையான் ஆளப் படும் | ஒரு செயலை நம்மிடம் செய்யக் கொடுத்தால் அச்செயலின் நன்மை தீமை இரண்டையும் ஆராய்ந்து எது நன்மையோ அதையே செய்ய வேண்டும். |
| 48 | 525 | சுற்றந் தழால் | கொடுத்தலும் இன்சொல்லும் ஆற்றின் அடுக்கிய<br>சுற்றத்தாற் சுற்றப் படும் | பொருள் கொடுத்தலும் இன்சொல் கூறுதலுமாகிய இரண்டும் செய்யவல்லவனானால் ஒருவன் தொடர்ந்த பலச் சுற்றத்தால் சூழப்படுவான். |

| | | | | |
|---|---|---|---|---|
| 49 | 531 | பொச்சாவாமை | இறந்த வெகுளியின் தீதே சிறந்த<br>உவகை மகிழ்ச்சியிற் சோர்வு | பெரிய உவகையால் மகிழ்ந்திருக்கும் போது மறதியால் வரும் சோர்வு, ஒருவனுக்கு வரம்பு கடந்த சினம் வருவதைவிடத் தீமையானதாகும். |
| 50 | 542 | செங்கோன்மை | வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்<br>கோனோக்கி வாழுங் குடி | உயிர்கள் எல்லாம் மழையை எதிர்பார்த்தே வாழும்; குடிமக்களோ ஆளுவோரின் நேர்மையான ஆட்சியை எதிர்பார்த்தே வாழ்வர். |